European Union
යුරෝපා සංගමය ஐரோப்பிய ஒன்றியம்

unicef

## செய்திக் குறிப்பு

# இலங்கையில் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்த நிதியுதவி வழங்கும் ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, பெப்ரவரி 3, 2012 - யுனிசெப் ஊடாக, ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி வழங்கும் புதிய பாடசாலை மற்றும் சுகாதார நிலையத்தின் மூலம் இலங்கையின் வடக்கு கிழக்கில் வடுப்பாடுடைய சமூகங்கள் பயன்பெறவுள்ளன.

இந்தப் புதிய சுகாதார நிலையமானது ஐந்திற்கு குறைந்த வயதுடைய பிள்ளைகள் மத்தியில் போஷாக்கின்மை மற்றும் பெண்கள் மத்தியிலான இரத்தச்சோகையை தடுப்பதில் முக்கியமான பாகத்தை வகிக்கவுள்ளது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையால் கிடைக்கும் முறையான கல்வி மூலம் சுமார் 900 மாணவர்கள் பயன்பெறுவார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் / தூதுக்குழவின் தலைவர் பேர்னாட் செவெஜ் விபரித்தார்: "கல்வியும், சுகாதாரமும் ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்து விருத்தி செய்ய விழையும் இரு துறைகளாகும். இந்தப் புதிய வசதிகள் திருகோணமலை மாவட்டத்தில் மிகவும் வடுப்பாடுடைய சமூகங்களுக்குத் துணைபுரிந்து, அவர்கள் மத்தியில் நிலவும் சிறந்த கல்வி மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை பற்றிய அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ள உதவும்."

யுனிசெப் ஸ்ரீலங்கா பிரதிநிதி ரேஸா ஹுசைனி குறிப்பிட்டார்: "ஐரோப்பிய ஒன்றியம் கொடையுணர்வுடன் மேற்கொள்ளும் முதலீடானது வடுப்பாடுடைய சமூகங்களைச் சேர்ந்த பிள்ளைகள் கற்பதற்குரிய வாய்ப்புக்களை விருத்தி செய்வதற்கும், பிள்ளைகள் மற்றும் பெண்களுக்கான சுகாதார பராமரிப்பில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்கும் பெறுமதியான வாய்ப்பை வழங்குகிறது. நிலைபேறான சமாதானத்துடன், பொருளாதார வளர்ச்சியை கட்டியெழுப்ப இலங்கை பாடுபடுவதால் இவை அனைத்தும் மிக முக்கியமானவை."

திருகோணமலைக்கு அருகிலுள்ள ஈச்சிலம்பற்று இலங்கைத்துறை முகத்துவாரம் இந்துக் கல்லூரி மாணவர்களுக்காக 30 வகுப்பறைகள், விஞ்ஞான ஆய்வுகூடம், ஆசிரியர் விடுதி, கௌரவமான குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகளை பெற்றுக் கொடுக்க ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை நாணயப்படி 30 மில்லியன் ரூபாவை (261,000 யூரோ) வழங்க முன்வந்தது.

மூதூர் பள்ளிக்குடியிருப்பில் கிராமோதய சுகாதார நிலையத்திற்காக இலங்கை நாணயப்படி ஐந்து மில்லியன் ரூபா (33,260 யூரோ) முதலீடு செய்யப்பட்டது. இந்த நிலையமானது உள்ளூர் சமூகங்களுக்கு குடும்பத் திட்டமிடல், குழந்தைப் பிறப்பிற்குப் பிந்திய மற்றும் தடுப்பு மருந்தேற்றல் சேவைகளையும், சிசுக்களின் வளர்ச்சியைக் கண்காணிப்பதுடன் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட

European Union
යුරෝපා සංගමය ஐரோப்பிய ஒன்றியம்

unicef

பிள்ளைகளுக்கு மேலதிக உணவு மற்றும் ஏனைய சிகிச்சைகளையும் வழங்குகிறது.

இந்த முதலீடுகள் இலங்கை அரசாங்கத்துடன் ஐரோப்பிய ஒன்றியம் - யுனிசெப் கொண்டுள்ள பங்காளித்துவத்தின் ஒரு பாகமாக அமைந்துள்ளன. இவை மிகவும் வடுப்பாடுடைய சமூகங்களின் கல்வி மற்றும் சுகாதார தேவைகளைத் தீர்ப்பதன் மூலம் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் நோக்கத்தைக் கொண்டவை.

இந்த இரு நிலையங்களும் பெப்ரவரி 3ஆம் திகதி இடம்பெற்ற வைபவத்தில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டன. இந்த வைபவத்தில் யுனிசெப் பிரதிநிதி ரேஸா ஹுசைனி, ஐரோப்பிய ஒன்றிய நடவடிக்கைப் பிரிவுத் தலைவர் விலி வென்டன்பெர்கெ ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

*** முடிவு***

மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளவும்:

*யுனிசெப் ஸ்ரீலங்கா தொடர்பாடல் தலைவர், மேர்வின் ப்ளெட்சர் +94 11 2768555 Ext 248,* mfletcher@unicef.org/UNICEF, *தொடர்பாடல் உத்தியோகத்தர் சுஸான் டேவி +94 11 2768555* ext *247,* sdavey@unicef.org *அல்லது ஐரோப்பிய ஒன்றிய தொடர்பாடல் பிரிவு 94-11-2674413* ext *103,* delegation-sri-lanka-press-and-information@eeas.europa.eu *அல்லது* vanessa.de-silva@eeas.europa.eu